DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.37/2025

PW - 1

| | | |
|---|---|---|
| Name | : | தினேஷ் (Lw - 1) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(எதிரி ஆஜர்)**

**(BNSS பிரிவு 348-ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதன் பேரில் அழைக்கப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை)**

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை **Date : 30.06.2026**

எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். சம்பவம் நடந்து எத்தனை நாட்கள் கழித்து போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றால் சம்பவத்தன்று சிங்களாந்தபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வந்து விசாரித்தார்கள். நான் சுமார் 03.00 மணிக்கு சென்றுவிட்டேன். பின்னர் போலிசார் வந்து விசாரித்தார்கள் நேரம் சரியாக நினைவில் இல்லை. எனக்கு சம்பவத்தை அடுத்து எப்போது மயக்கம் தெளிந்தது என்றால் சிங்களாந்தபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் இருந்து நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு சென்று கொண்டிருந்தபோது மயக்கம் தெளிந்தது. நாமக்கல் அரசு மருத்துவமனையில் போலிசார் என்னை விசாரித்து கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரிதான்.

சிங்களாந்தபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் இருந்தபோது போலிசார் விசாரித்து என்னிடம் கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரிதான். இவ்வழக்கில் இரண்டு இடங்களில் என்னிடம் வாக்குமூலம் பதிவு செய்து கையொப்பம்

பெற்றுகொண்டார்கள் என்றால் சரிதான். சம்பவமானது எனது சின்னம்மா பேபி என்பவரின் வீட்டிற்கு அருகில்தான் நடந்தது என்றால் சரியல்ல. அவரது வீட்டில் இருந்து 100 அடி தொலைவில் இருக்கும் ஓடையின் அருகே நடந்தது. மேற்படி சங்கதியை நான் போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் எனக்கு நினைவில் இல்லை. நான் புகார் மற்றும் முதல் விசாரணையில் எனது சின்னம்மா பேபி வீட்டின் அருகே நடந்தது என்று சொல்லிவிட்டு தற்போது ஓடையின் அருகே நடந்ததாக முரனாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

சம்பவத்தை எனது அண்ணன் மற்றும் சித்தி பேபி ஆகியோர் நேரில் பார்த்ததாக புகாரில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். போலிசார் விசாரணையின்போது எனது இரத்தம் படிந்த ஆடைகளை போலிசாரிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். சம்பவமானது உண்மையில் நடந்திருந்தால் போலிசாரிடம் எனது இரத்தம் படிந்த ஆடைகளை ஒப்படைத்திருப்பேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி பசுபதி எனது அண்ணணின் மனைவியின் தம்பி என்றால் சரிதான். ஆஜர் எதிரிக்கும் எனது அண்ணனுக்கும் முன்விரோதம் இருந்து வந்தது என்றால் எனது அண்ணணின் மனைவியை குழந்தை பிறந்ததற்கு பின்னிட்டு எங்கள் வீட்டிற்கு அனுப்பாததால் அதனை எனது அண்ணன் கேட்டபோது எதிரி எனது அண்ணனை போனில் மிரட்டினார்.

ஆஜர் எதிரி எனது அண்ணனை மிரட்டவில்லை என்றாலும், திருவிழாவின்போது நானும் எனது அண்ணனும் குடித்துவிட்டு கீழே விழுந்து ஏற்பட்ட காயத்தை வைத்துக்கொண்டு எதிரியின் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவமானது உண்மையில் நடந்திருந்தால் எதிரி சம்பவத்திற்கு பயன்படுத்திய கத்தியை கைப்பற்றி நீதிமன்றத்தில் ஒப்படைத்திருப்பேன் என்றால் சரியல்ல. போலிசார் என்னை மருத்துவமனையில் விசாரித்ததற்கு பின்பு வேறு எங்கும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் உண்மையில் நடக்கவில்லை என்றாலும், எனது அண்ணனுக்கும் எதிரிக்கும் உள்ள முன் விரோதத்தின் காரணமாக எனது அண்ணன் என் மூலமாக எதிரியின் மீது பொய்யாக புகார் அளித்துள்ளார் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**